**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 35-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 5 | | Examined as : PW 5 | |
| Name | : பாரதிராஜா | Defence | : |
| Father/Husband Name | : பாலு (எ) பாலாஜி | Court | : |
| Village | : மேலப்பெரும்பள்ளம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 40/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 07.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இ சேவை மையம் வைத்து நடத்தி வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 17.08.2021ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் மோகன் என்பவரும் எங்கள் கடையில் இருந்த போது எங்கள் கடையின் அருகில் உள்ள கனரா வங்கியின் அருகில் செம்பனார்கோவில் போலிசார் அங்கு வந்து முதல் நாள் எதிரிகள் கனரா வங்கியின் மேலாளருடன் தகராறு செய்ததது சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் மோகன் என்பவரும் சாட்சி கையபொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**